1 +

தை

நோயும் மருந்தும்

ஏடு எண். 162 B.

பக்கம் -36லிருந்து தொடங்குகிறது
1-முதல் 35 பக்கங்கள் 162A-யில் உள்ளது
1-35 பக்கங்கள் வேறு நூல்.

முடித்த நாள் - 9.5.1994.

109.
பக். 82-94. குறிகுணங்கள் எடுத்துக்
கொள்ளப்படவில்லை.
மருந்து செய்முறைகள் எடுக்கப்பட்டன.

72

இவ் பாடல்களின் உள்ளன
அவ்வுரிக்கு உரை எழுதி
பதிப்பிக்கலாம்.
[illegible]
28/12/10.

[illegible]. 162 B

பொருளடக்கம்

கபாலக்குத்துக்கு

முழுக எண்ணெய்.

141 இஞ்சிச்சாறு, வெள்ளைத்தழைச்சாறு, நொச்சிச்சாறு, ஆதண்டையிலைச்சாறு, குப்பைமேனியிலைச்சாறு ஆக வகைக்கு சாறு படி-1, நல்லெண்ணெய் படி-1, பசுவின்பால் படி-1, கற்க மருந்து — கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், நல்லமஞ்சள், தேவதாரம், வெள்ளைப்பிசின், சாம்பிராணி, நல்லகடுகு, உள்ளி ஆக வகைக்கு வராகனெடை-1 மெழுகுபதத்தில் காய்ச்சி நான்கு நாட்களுக்கொருதரம் முழுகி வரவும்.

அ. ## நிலவாகை கற்பம்.

சனிக்கிழமை நாள் காப்புக்கட்டி ஞாயிற்றுக் கிழமை நாள் ~~பலி~~ கொடுத்து வேராமல் பிடுங்கிக் கொண்டு நிழலில் ~~வாட்டி~~ உலர்த்தி பொடியாக்கிக் கொண்டு வெருகடி பிரமாணம் பசுவின் பாலில் கொள்ள வீரியமுண்டாம். இப்படி நீர் கலந்து கொடுக்க வயிற்றின் விகார் தீரும். துளசிச் சாற்றில் கொள்ள குளிர் வெதுப்புந் தீரும்.

நீர்ரேணின் கொள்ள கண்ணோவு தீரும். கொன்றைப் பட்டையின் கொள்ள இரட்டந் தீரும். வெந்நீரின் கொள்ள யானைமனி தீரும். துளசியினைச் சாற்றில் கொள்ள சூலையுந் தீரும். ஒருமண்டலம் பசுவின் நெய்யின் கொள்ள நரைதிரை மாறும். தேனின் கொள்ள தேற்றமும் போகும்.

142. மேகவெட்டை இருபத்தொன்றுக்கும் கைகால்களிலே காணுகிற பூந்துகளுக்கும் எண்ணெய் வைக்கும்படி.

பறங்கிப்பட்டை - பலம் - 2, பிரப்பன் கிழங்கு - பலம் - 2, வெள்ளருகு பலம் - 2, சிவனார்வேம்பு - பலம் - 2, துரட்டித்தழை - பலம் - 2, சித்திரமூலம்வேர் - பலம் - 2 இந்த அறுவகை மருந்துகளையும் ஒன்றிரண்டாய் இடித்து ஒரு மிடாவில் போட்டு பதக்கு தண்ணீர் விட்டு கஷாயம் போட்டுக் காய்ச்சி யெண்ணெயளவு இறுத்துக் கொண்டு, சங்கங்குப்பிச்சாறு, கழுதாளைச்சாறு, கழுதையின் சிறுநீர், நல்லெண்ணை - படி - 1 இந்த 3க்கென் அளம் நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி பதம் வந்த போது இறக்கிக் கொள்ளவும். இறக்கி எண்ணெயை இறுத்துக் கொள்ளவும்.

இந்த எண்ணெயை ~~[struck]~~ அந்திசந்தி

அ. ~~ஆ~~ மூன்று நாட்கள் ஆறுவேளை சாப்பிடவும்
சாப்பிடுகிற போது காரத்தை கை, கால்களில்
நன்றாய்த் தேய்க்கவும். பத்தியம் - கடும்
பத்தியம் - ~~கடும்பத்தியம்~~. மூன்று நாட்களுக்கு
எண்ணெய் சாப்பிட்டு மறுபத்தியம் மூன்று
நாட்களுக்கு பருந்து ஒயடூநாள் தலை
முழுக. ~~[struck]~~ - தலைக்குப் பொருந்திய
எண்ணெய் தேய்த்து முழுகவும்.

---

143. தூளக பற்பம்.

பொன்னரிதாரம் - வராகனிடை - 50,
வெண்காரம் - வராகனிடை - 5 இவை
இரண்டும் ~~[struck]~~ முப்பது எலுமிச்சம்பழச்சாறு
விட்டரைத்து வில்லை பண்ணி சட்டியின்
பெரும்பூசணி பழச்சாறு ஒரு (x) குள்ளம் விட்டு
இந்த மருந்தை தோளைந்திரமா யந்தச் (துலாயந்திரமாக)
சாறு நாலு விரற்கிடைக்கு மேல் தொங்க
கட்டி அடுப்பின் வைத்து சாறு சுண்டத்
தீயெரித்து அதன் பின்பு ~~தோளை~~ (துலாயெ) ந்திரத்தை
அவிழ்த்து மடக்கில் வைத்து நிழலுலரவிட்டு
எடுத்து மறுநாள் ~~தோளை~~ (துலாயெ) ந்திரங்கட்டி
சட்டியின் இரண்டுபடி தென்னாட்டுக்
கோமியம் விட்டு ~~தோளை~~ (துலாயெ) ந்திரங் கட்டி
சட்டியால் இரண்டுபடி கைய்யாந்தகரைச்
சாறு கூடவிட்டு சாறுங் கோமியமும்

(x) ஏழு மடங்கால்

அண்ட வரித்து அதை எடுத்து மடக்கி
வைத்து நிழலுலர்த்தி கட்டி வைத்துக்
கொண்டு பற்பம் பண்ண வேணுமென்றால்
அ பத்து விராகனிடை தாளகமும் அந்த
விராகனிடை ரசமும் ~~வைப்பு~~
ஆமணக்கின் சாறுவிட்டு அந்த
வில்லை பண்ணி பெரிய ஒன்று சட்டி-
-யின் வைத்து அரைத்த அம்மியின் அந்தச்
சாறு விட்டுக் கழுவி அந்தச் சட்டியின்
X ஊற்றிக் கொண்டு மேல் சட்டியின்
ஆமணக்கின் சாறு நன்றாய்த் தடவிக்
காய வைத்து. பின்பு கீழ்ச்சட்டியின் நாலு
படி மையாமணக்கின் சாறுவிட்டு
அடுப்பின் வைத்து சட்டி மூடாமல் அந்தச்
? சாறு அண்டச் அண்டக் காச்சி ~~மூடிய~~
~~சாறு அண்டக் காச்சி~~ சட்டியை மூடி
பதினொரு சீலைமண் செய்து பெரிய
கடுந்தீயா யெரிக்கவும். தொண்ணூறு
நாழிகை ராத்திரி பகல் எரியவிட்டு ஆற
144 விட்டு சட்டியைத் திறந்து பார்த்தால்
வெள்ளையாய் விபூதி யுண்டை போலே
பற்பமாய் இருக்கும். அந்த பற்பத்தின்
மேலே இருந்த கருப்பெல்லாம் நிதானமா
யெடுத்துப் போட்டு மேல் சட்டியின் ஒட்டி-
யிருந்த பற்பத்தையும் ஜோனையின்

வளி
சுரைத்து அவ்வாவற்றையும் பணியவைத்துக்
கொண்டு இந்தத் தாளக பற்பம் அரைக்கால்
பணவிடை தேனில் கொடுக்க தீரும்போம்.
ஒருமண்டலம் அரைக்கால் பணவிடை
அ. தேனிற் கொள்ள பதினெட்டுக் குட்டமும்
போம். கிரந்திப்புண் புரையோடுகிறது
அரையாப்பு, கிரந்திக்கட்டுக் கிரந்திகள்,
கொப்பளிப் புருதி, வயத்தில் கெண்டை,
க்ஷயரோகம், சுவாசகாசம், மேற்சுவாசம்,
மேகசன்னி, தீராத வியாதி, கால், கைமுடக்கம்,
சர்வாங்கக் கிரந்தி சகல ரோகமும் போம்.

அனுபானம் - வெள்ளைச் சீரகம், பசுவின்-
-நெய், திப்பிலிப் பொடி, தேன். இந்த அனு-
பானத்தில் ரோகம் அறிந்து கொடுக்கவும்.

பத்தியம் - துவரைப்பருப்பு, அரைக்கீரை
வெள்ளாட்டு வத்தல், பசுவின்பால், பசுவின்-
நெய், உப்பு கொஞ்சம் வறுத்துப் போட்-
-டுக்கொள்ளவும். புளி, தயிர், மோர் தவிர்க்கவும்.
இருப்பான பண்டம் தவிர்க்கவும். இது கை-
கண்டது.

ஒருதரம் அரைத்து பூசணிக்காய்ச்
சாற்றில் சுத்தி பண்ணிக் கொள்ளவும்.

அம்பாள் துணையுண்டு.
சிவனும் மாலும் துணை.

---

145 - 189 வரையுள்ள சுவடிகள் விடுபட்-
-டுள்ளது.

41.

வெள்ளாற்றுச் சேதியும்

190 கிர்முக ணடையன் மாமன்னர் தூவி
கடலை யோட வெள்பயர் தோவை
கனிதொரு பக்கம் மினிதொரு பக்கம்
பாங்காய் படைத்து தேங்கா யுடைத்து
தூபங் கொடுத்து தீப மெடுத்து
கையொடு பொத்தி வையகந் தன்னில்
வாழு மனிதர்க்கு நோயெல்லாந் தீர
வெள்ளாதி சேதியந் சாத்தக்கேள்

திப்பிலி சூரம் திரிகடு கோரம்
கொத்த மல்லிகை கூறுவாய் விளங்கம்
ஏமஞ் செவியம் உயர்கருஞ் சீரகம்
இதுவெல்லாம் ஆகைக்கு அரப்புளம தாகிப்
பரங்கிப் பட்டை ப(ழு) மதுர ~~[illegible]~~ ~~[illegible]~~
~~[illegible]~~
செங்கொட்டை யாருவது சேர்க்க பிறவட்ட
குமரி மடலக் குன்னே வைத்து
வெந்தபின் னெடுத்து விதசாணிச் சாத்தின்
பளிக்கிய பளிக்கி பளியணைச் சாத்தின்
அப்படிப் பளிக்கி பளிக்கியே தானிம்

கடைமருந் தெல்லாங் காய/வைத்து ~~[illegible]~~
~~[illegible]~~
இரந்துன் னரைப்படி இதுசெங் கொட்டை
புல
பனையின் வெல்லம் பன்னிரு பலமும்

உழுத்து நல்லெண்ணை விட்டு சேர்த்திடித்து
கழற்கொட்டை யளவு தனையுண்டை செய்து
அந்தி சந்தி மண்டலங் கொள்ள
அ. யச்சா பத்தியம் யேதென யென்னில்
கரப்பன் பண்டம் கையின் தொடாமல்
யாருப்பி நாகின் யாது ~~[illegible]~~
தீரும் வியாதி செப்பக் கேளீர்
அந்திர வாய்வு அழுகைக் குறைத்திடும்
வந்திடு கிரந்தி வருநோய் ~~[illegible]~~ வாய்வு
கய்யினில் கருப்பு காலினில் கருப்பு
மெய்யனில் தடிப்பு வெகுபுரைப் புண்கள்
மயரை உதிர்த்திடும் வந்திடு கிரந்தி
மேகத்தின் வந்த வியாதிக ளெல்லாம்
போகத் தன்வந்திரி புகன்ற வாறே.

மேகத்துக்கு இரசாயனம்

சங்கொடு சங்காங் குப்பி
தயவுடன் சித்திர மூலம்
பொங்குமோ அசுவ கெந்தி
புகழ்நிலப் பனையின் வேரும்
யாங்கினை செங்கத் தாரி
யணைந்திரு கிழிநெ ருஞ்சி
மாங்குயூ வரசின் பட்டை
வுகைக்கொரு பலடு தைத்தோம்.

உரைத்திடு ஜமாங் கோஷ்டம்
உளுதுணா தேவதாருங் கூட்டி
பருத்த அக்குடன் மிளகு
பழகிய திப்பிலி பொடியும்
திருத்தமாம் வாய்விளங்கம்
சேர்த்தே லவங்கப் பத்திரி
அரத்தையும் புருங்கைப் பத்திரி
அரிஞ்சடா மாஞ்சி கூட்டே.

கூட்டடா பரங்கிப் பட்டை
191 இருப்புடன் சமனாய்ச் சேர்த்து
தீட்டு சர்க்கரை நெய்தேனில்
சேர்த்தே சமனு மொன்றாய்
பூட்டியே இடும்பு தாக்கி
புதியதா யெடுத்துக் கொண்டு
நாட்டியே நாற்பத் தெட்டு
நாளது கொள்வீர் தானே.

கொள்ளவே சகல மேகம்
குட்டமுங் குன்மை இன்மம்
பண்ணிய மலத்தின் கட்டும்
பயித்திய வாய்வு சோம்பல்
தெள்ளிய தாது நைக்கும்
சேர்ந்திடு நோயுந் தீரும்
உள்ளதன் மந்திரி யாண
உரைத்திடு நோய னைந்தான்.

44.

68 மோகத்துக்குத் தைலம்.

வேணப்பா தயிலவகை சொல்லக் கேளு
வேரான மிளகுபலம் வாய்விடங்கம் பலங்கான்று
தோணப்பா வான்மிளகு காற்பலந்தானும்
துகைசேர்ந்த கோஷ்டமொரு பலவீத மாகும்
நாணப்பா கடாமாஞ்சி அதிமதுர முடனே
நலமிகுந்த கஸ்தூரி மஞ்சள்வகை மூன்றும்
காணப்பா விதைகளைத் தூன்றாம் பின்னும்
கருதியே விளாமிச்சம் பலந்தா னொன்றே. 1

அ. ஒன்றான பருங்கோரைக் கிழங்கிதனைக் கூட்டு
உய்ந்துநின்ற விதைகளுமே னான தாகும்
நன்றாக இதுவெல்லாம் ஆவின்பால் விட்டு
நயமாக அரைத்துப்பின்பு மருந்தைக் கேளு
சென்றாடு மொசுமொசுக்கை பொன்னாங் காணி
சிறந்ததொரு கரிசாலை வகைக்கிக்கான் பழச்சார்
குன்றாத ~~[illegible]~~ காத்தொட்டிச் சார்தாத் தப்பா
குறைவில்லா பால்விட்டு சாரபிழிந்து கொள்ளே.

கொள்ளடா பச்சைச்சார் கால்படிதான் கூறு
கூறுகெட்ட மானிடர் பச்சைதனை யறியார்
தின்னடா காரபடுப் பான்காரத்து காச்சி
வேறான உறையூத்திக் கடைந்த தேனில்
தெள்ளடா புளியிலைவிட் படுத்த் சாறு
திறமான பச்சையென்று சேதி யாச்சு
வெள்ளடா வெள்ளெண்ணெய் பழுண்டு விட்டு
வேகமா மெழுகுபதங் காச்சி வாங்கே.

வாங்கியொரு மண்டலந்தான் புழுகும் போக்கில்
மருவிநின்ற குட்டம்பதி னெட்டுந் தீரும்
தாங்கிநின்ற வெட்டை யெண்பத்தெட்டுந் தீரும்
சத்திகுன்மம் அத்திசுரம் கபாலச் சூடு
தொங்கிநின்ற உள்சூடாங்கண் மண்டைபிணி சுழல்
தேகத்தின் உள்வறட்சி தீருந் தீரும்.

---

192. மேகத்தி லெழுந்த காந்தல், கணச்சூடு
மேகநீர் இதுக்கு எண்ணெய், மருந்து.
பொன்னாங்காணிச்சார், கையாந்தகரைச்-
-சார், சீதா செங்கழுநீர்ச்சார், தேத்தான்-
யிலைச்சார், திருக்கீரைச்சார், சிந்திக்கொடிச்-
-சார், எலுமிச்சம்பழச்சார் ஆக சாறு
வகைக்கு படி - 3/4, நல்லெண்ணெய்-
-படி-1, பால் படி-3/4, இளநீர்-படி-3/4,
~~[illegible]~~, கோரைக்கிழங்கு -பலம் -1/4

வில்வவேர் - பலம் - 1, அதிமதுரம் - பலம் - 1/4, சந்தனக்கட்டை - பலம் - 1/4, வெட்டிவேர் - பலம் - 1/4, விளாமிச்சம்வேர் - பலம் - 1/4 அருகன்வேர் - பலம் - 1/4. இவ்வளவும் கொத்தி நொறுக்கி இடித்து கஷாயம் இட்டு பால் போட்டு ரெண்டுபடி தண்ணீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சி இறுக்கிக்கொள்ளவும்.

அ. <u>கர்ப்பமருந்து</u> - கோஷ்டம், மிளகு, தேவதாரம், மரமஞ்சள், சாம்பிராணி, செஞ்சந்தனக்கட்டை, ஜடாமாஞ்சி ஆக வகைக்கு விராகனிடை - 3 யளவெல்லாம் இந்த

? <u>~~இவைக்கு~~</u> எடுத்து நிறுத்து முன்சொன்ன கஷாயத்தில் அரைத்துக் கரைத்து சாறும் எண்ணையும் கஷாயமும் மருந்தும் கூட்டி தீயெரித்து மெழுகு பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

---

193 <u>வெள்ளை, இரத்தம் விழுகின்றதுக்கு உள்ளுருக்கி பிரமேகத்துக்கு</u>

<u>நெய்.</u>

வல்லாரைச் சாறு - படி - 1/2, வில்வத்தழைச் - சாறு - படி - 1/2, அத்திப்பட்டைச் சாறு - படி - 1/2, பழம்பாசிச்சாறு - படி - 1/2, இலந்தைத்தழைச்சாறு - படி - 1/2, தகரையிலைச்சாறு - படி - 1/4, இளநீர் படி - 2 ஆவரையிலைச் சாறு படி - 1/4, பசுவின்பால் படி - 1/2, பசுவின் நெய் - படி - 1

கடைச்சரக்கு - மிளகு, சீரகம், சாதிக்காய்
சாதிபத்திரி, லவங்கப் பத்திரி, லவங்கப்பட்டை,
ஏலம், கோஷ்டம், கிராம்பு, சந்தனம், அதி-
மதுரம் ஆக வகைக்கு வராகனிடை - உ,
இளநீர் ~~தண்ணீர்~~ விட்டு கடைமருந்து
அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகு
பதத்தில் வடித்து காலமே நெய்யும்
அந்திக்கு கற்கமும் தின்று வரவும்.
இப்படி இருபத்து நான்கு நாட்கள் சாப்பிடவும்.
உள்ளுருக்கி, சூடு, பிரமேகம் இவை-
யெல்லாம் போம். புளி, புகையிலை
தவிர்க்கவும்.

பயித்திய பிரமைக்கு மருந்து.

பசுமாட்டு தலையோடு வராகனிடை - 10
மனுஷ மண்டை ஓடு காடாத்து முன்னே
யெடுத்து வந்தது வராகனிடை - 10, நாய்த்தலை-
ஓடு வராகனிடை -10, இந்த மூன்று
மட்டையும் நெய்ய நறுங்கத் தட்டி கழுதைப்
பால் விட்டு அரைத்து வில்லை செய்து
ஆறு எருவில் புடம் போட்டு எடுத்துக்
கொண்டு இஞ்சிச்சார் இரண்டு அட்டிடை,
முலைப்பால் படி-ல், கரும்பு சர்க்கரை
ஒரு அட்டிடை, முன் சொன்ன பற்பம்
நேரம் ஒன்றுக்கு ஒன்னே கால் வராகன்
பற்பம் போட்டு இப்படி பனிரெண்டு நாட்கள்
அந்தி சந்தி சாப்பிடவும்.

பூச்சத்திரானம்

சீலை:- கழுதைக் குட்டி ~~யின்~~ படு பக்கத்து
சட்டை, நல்லபாம்புச் சட்டை முன் சொன்ன
சீலை இந்த ரெண்டு வகையும் சீலையால்
வைத்து திரித்து எருதின் இச்சி வேப்பெண்-
194 -ணை கொண்டு திரித்தயின மிறக்கி
துவாரனை போடவும்.

முழுக்கெண்ணெய்

பசுமாட்டுக் கோமியம் படி - ½
பசுவின் பால் - படி - ½, மொசுமொசுக்கைத்
தழைச் சார் - படி - ½, கையாந்தகரைச்-
-சார் படி - ½, நல்லெண்ணெய் படி - ½
விட்டுக் காச்சி மெழுகு பதத்திறக்கி வைத்துக்
கொண்டு முழுகவும்.

~~ரோகாஸ்திரி~~ இரணசீலை (ரோகாஸ்திரி)

வெள்ளை மெழுகு - வராகனிடை - 10
வெள்ளைக் குங்கிலியம் - வராகனிடை - 10
~~[illegible]~~ ரசகற்பூரம் - வராகனிடை - 1
இவ்வளவும் தேங்காய் நெய்யில் போட்டு
உருக்கி கீழே சட்டியில் தண்ணீர் ~~[illegible]~~
ஊற்றி மேலே உருக்கின மருந்தை
சீலையாலாற்றிப் ~~[illegible]~~ பிழிந்து போட்டு
ஆறவிட்டு எடுத்து சீலையில் தடவி
வைத்துக் கொள்ளவும். ரணத்துக்கு
கொஞ்சம் கிழித்துப் போடவும்.

அ. கரிம்பு மருந்து.

வெள்ளை குங்கிலியம், காசுக்கட்டி, பச்சை-
-கற்பூரம், மாசிக்காய், மிருதார்சிங்கி
சமனிடை முன்சொன்ன மருந்து வகைக்கு
விராகனிடை -1 பசுவின் வெண்ணெய்,
தேங்காயளவு வைத்து அரைத்து சாறு
(இரவும்)
தண்ணீரில் ~~இரவும்~~ பகலும் இருக்கவிட்டு
அப்புறம் ரணத்துக்கு எடுத்துப் போடவும்.

விருத் / தாது ~~வ~~ர்த்திக்கு.

ங்கிப்பட்
உரு டை விதை, பூமிச்சக்கரைக் கிழங்கு,
அத்திவேர்ப்பட்டை, சந்தனம், தேத்தாங்-
கொட்டை, முருங்கைவேர்ப்பட்டை
கிழக்கே ஆடுனதி, பூனைக்காலி விதை
தேங்காய்ப்பால் விட்டு அரைத்து வெள்-
-ளாட்டுப் பாலில் சீனிச்சக்கரையும் மருந்து
195 போட்டுக் குடிக்கவும். இப்படி மூன்று நாட்கள்
ஆறு நேரம் சாப்பிட்டு நாலாநாள்
ஆறவிட்டு அஞ்சாநாள் தலை முழுகி
ஆறாநாள் புணர்ச்சி செய்யவும். தை
கண்டது. அவ பத்திய மாத்திரம் ஆகாது.

ஜெ.பி உ.பி

கபால கறுப்பானுக்கு எண்ணெய் காய்ச்ச மருந்து.

நொச்சித்தழைச்சாறு, வெட்பாலைத்தழைச்
சாறு, புண்ணாக்குப் பூடுத்தழைச் சாறு, அமுக்-
ரா/- கிராத்தழைச் சாறு, கொழுபாவத்தையினைச்-
-சாறு, சாராயம், தேங்காயெண்ணெய்
ஆக வகைக்கு சாறும் எண்ணெயும்
திமணி, கடைச் சுக்கு - தத்தம், துருசு,
வெரசி, கார்போக அரிசி, வெப்பாலரிசி
வாலுளுவையரிசி, கொத்தமல்லிவிரை, சீரகம்
காசுக்கட்டி, அபின், வெள்ளை குங்கிலியம்
மெழுகு, வெம்பாடஞ் சுருக்கு ஆக வகைக்கு
விராகனிடை - 1/4, மெழுகுபதம்.

—

அ

பல்விளக்குகின்ற குச்சி குணம்.

வேலுக்குப் பல்லிறுகும். வேம்புக்கு
பல்புழு | ஆலம்பழுக்கு காமம் பொருகியுமே
ஆலுக்கு

வேலுக்குப் பல்லிறுகும் வேம்புக்கு பல்புழு
நாம்பலுக்கு காமம் பொருகியுமே - ஆலுக்கு
வெண்டா மறையான் வசீகரிப்பான் நாயுருவி
கண்டால் முகவசியம்

—

196. நரம்புச் சிலந்திக்கு.

ரு/ பொடுதலையும் ஈரவெங்காயமும் கம்மஞ்சோற்று நீச்சுத் தண்ணீர் விட்டுத் துவைத்து சாறு பிழிந்து அந்தி சந்தி மூன்று நாட்கள் கொடுக்கவும். மூன்று நாள் மருந்து பத்தியம். கைப்பு, புளிப்பு ஆகாது.

புண்ணுக்குக் கட்ட மருந்து.

ரு/ பொடுதலையை இடித்துச் சாறு பிழிந்து போட்டு ஆண்பிள்ளைக் கொண்டான் பெண்பிள்ளை சிறுநீர், பெண்பிள்ளைக் கொண்டான் ஆண்பிள்ளை சிறுநீர் விட்டு வெருத்துக் கட்டவும். இப்படி ஆறு கட்டுக் கட்டவும். நரம்பு கூட்டோடே விழுந்து போகும். இது கைகண்டது.

அ. நரித்தலை வாதத்துக்கு மருந்து.

வீழித்தழை ஒரு இத்தி, ஆவாரந்தழை ஒரு இத்தி, புண்ணாக்குப் பிடுத்தழை ஒரு இத்து வெள்ளை வெங்காயமும் போட்டு துவைத்து மெழுகு படியாகப் பிடித்து நாற்சதிரமாக மெழுகி அதில் மூன்று பக்க மூன்று வெற்றிலை ஒருபணந் தெட்சணை வைத்து நடுவே மூன்று மண்ணுங் கட்டி வைத்து அதிலே ஒரு ஓடு வைத்து

அதிலே ஆமணக்கெண்ணெய் ஊற்றி தாளங்கொடுத்து தீயெரித்து முன்சொன்ன மருந்தை ~~ஆம~~ எண்ணெயில் ~~ஊற்பட்டுக்~~ பூசு கட்டவும். நரித்தண் வாதம் போம். இப்படி மூன்று நாட்கள் செய்யவும்.

---

197. சீத பேதிக்கு.

பொன்முட்டை வேர், மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, தேசாவரம், சூடம், வசம்பு சித்தரமூலம், செவியம், கோணியட்டு ~~ஆக~~ ஆக வகைக்கு விராகனிடை - 6

அட்டியைக் காய வைத்து யானைமலெவ்வளம் யடித்துப் போட்டு பற்பமாகிற வரைக்கும் கிளறிக் கிண்டிக் கொடுக்கவும். அதின் பிறகு ஒரு உழவின் சொட்டுக் கறுந்தி- விடுத்து தேன் விட்டு இடித்து களிப்போலே எடுத்து பீப்பா தகட்டில் அடைத்துக் கொள்ளவும். பேதியான பேர்களுக்கு முதலில் எலுமிச்சங்காய் அளவு கொடுக்- கவும். இரண்டு நாழிகை பொறுத்து மூணாவது அதின் பாதி கொடுக்கவும். சன்னிவீச்சு அதின்ரைவாசி கொடுக்கவும். சன்னிவீச்சு இதுகள் கண்டால் இஞ்சி, சித்தரத்தை

அ

புங்கம்பட்டை, பெருமரத்துப் பட்டை
மாவிலிங்கம் பட்டை இவைகளை
? தட்டி சாறுபிழிந்து ~~அரைத்து~~ தேன்விட்டுக்
கலக்கிக் கொடுக்கவும்.

உறுப்பு தள்ளினதுக்கு.

ஆதி பஞ்சாங்கம் வகைக்கு ஒவ்வொரு பலமெடுத்து இடித்து மூன்றுபடி தண்ணீர் விட்டு ஒரு ~~படி~~ படியாக வற்றக் காய்ச்சி அந்தகஷாயம் கொஞ்சம் எடுத்துக் கஷாயம் விட்டு அரைத்து பின்னும் கஷாயம் விட்டுக் கலக்கி எருமைமோர் விட்டுக் கொடுக்கவும். இந்தப்படி அந்தி சந்தி மூன்று நாட்கள் சாப்பிடவும்.

சிட்டுக்குருவி லேகியம்.

198. சிட்டுக்குருவி நாலும் அறுத்தெடுத்து குடல், தலை ~~இறகு~~ இவைகள் நீக்கிப் போட்டு பசுவின் நெய்யால் வேகவைத்து உடப்பாறையா-யிடித்து களிப்போல் ஆக்கவிட்டு அதிலே சீனி - பலம் - 6/4, பனை வெல்லம் - பலம் - 6 பனங்கல்கண்டு - பலம் - 6, சீனிக்கல்கண்டு - பலம் - 6 இவையெல்லாம் அந்த மாமிசத்தில் போட்டு பாகுபடுத்தித் திரட்டி ஒரு பாத்திரத்தில்

வைத்துக் கொண்டு அந்தி சந்தி கழச்சிக்காய் பிரமாணம் நாற்பத்தெட்டு நாள் சாப்பிடவும்

மதுணகுடோரி லேகியம்.

கடைச் சரக்கு - சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கசகசா, தான்றிக்காய், அதிமதுரம், கோஷ்டம், [illegible], வால்மிளகு, மிளகு, லவங்கப்பட்டை, சடாமாஞ்சி, கற்கடக சிங்கி, கடுக்காய், கருவேலம் பிசின், கருவேலங் கொழுந்து, ததனை-அவர் மொட்டு, ஆலம்பால், கருவேலம் பிஞ்சு, அத்திப் பிஞ்சு, அத்திப் பால், கல்லிச்சி மொட்டு, கல்லிச்சிப் பால், முருங்கைப் பூ, முருங்கைப் பிஞ்சு, பருக்கம்பால் ஆக வகை ஒன்றுக்கு சரக்கு (முருங்கை) பிசின் பால், கொழுந்து மொட்டு வகைக்கு விராகனிடை -6; தேங்காய்ப் பால் படி-1 வெள்ளாட்டுப் பால் படி-1, இளநீர் படி-1 இந்த நாலு வகையும் கலந்து அடுப் பேற்றிக் கொதிக்கிற பதத்தில் பிறகு முன் வகையைப் போட்டு மறுபடி முன்னிடுத்த பதார்த்தத்தையும் போட்டு சூரணத்தையும் போட்டுக் கிண்டவும். தேன் படி அரைப்படி விட்டுக் கிண்டவும். பசுவின் நெய் ஒருபடி விட்டுக் கிண்டவும். கணபதி பூசை செய்யவும்.

காதிரைச்சல், கபாலக்குத்து, கபால வாய்வு, காது மந்தம் இவற்றிற் கெண்ணெய்.

199. கொள்ளுமிலை சார்துளசி கொண்டுவந்து இடித்து நல்லதண்ணீர் படி ரெண்டு விட்டு கஷாயம் அண்ட வெரித்து அரைப்படி ~~[illegible]~~ ~~[illegible]~~ கற்க மருந்து:- சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், திக்கிப்பசின், கடல்நுரை, வசம்பு, மாசிக்காய், கோஷ்டம், தேவதாரும் இவை வகைக்கு விராகனிடை - 2, இஞ்சிச்சார் படி - ¼, மஞ்சள்சார் - ¼, ஆதண்டையிலைச்சார் படி - ¼ இந்த மூன்று சாறும் விட்டு
அ. நல்லெண்ணெய் படி ரெண்டு விட்டு) மெழுகு பதத்தில் காய்ச்சி வாக்கிக் கொள்ளவும் ~~[illegible]~~ தீரும் வியாதி - காதிரைச்சன், கபாலக்குத்து, கபாலவாய்வு, காது மந்தம் இவையெல்லாந் தீரும். இது கைகண்டது.

அஷ்ட குன்மத்துக்கும் திசைவாய்வுக்கும் எண்ணெய்.

☆

200 சாதிக்காய் - விராகனிடை - 2, ஏலம் - விராகனிடை - 2, கருஞ்சீரகம் - விராகனிடை - 2, ஓமம் - விராகனிடை - 2, சீரகம் - விராகனிடை - 2, கிராம்பு - விராகனிடை - 2, சுக்கு - விராகனிடை - 2, மிளகு - விராகனிடை - 2, வால்மிளகு - விராகனிடை - 2

அதிமதுரம் விராகனிடை - 1 இந்தப் பத்து மருந்தும் பொடி செய்து ஒரு படி ~~வேப்பெண்ணெய்~~ எண்ணெயில் போட்டு சூரிய புடமிடவும். அந்தி சந்தி சாப்பிட்ட பின்னாலே குடிக்க-வும். சகல வாய்வுந் தீரும். சகல குன்மமுந் தீரும். பெண்களுக்கு சூதக வாய்வு தீரும். பிள்ளைப் பேறுண்டு. இது கை கண்டது.

அ. அசுவகந்தி பவாதி சூரணம்.

பாரப்பா அசுவகந்தி பவாதியைத்தான்
பாடுகிறேன் தும்புராஞ்சம் திறுதேக்கி கூடு
நேரப்பா அதிவிடையம் செவியம் ஜாதி
நிலையான லவங்கம் மஞ்சிட்டி தேவதாரம்
காரப்பா சடாமாஞ்சி மதுரஞ் அக்கு
கனமான தாளிசந்தான் கோஷ்டமோ மிச்சம்
சேர்வார் கொற்றமல்லி லவங்கப் பட்டை
வளமான ~~[illegible]~~ ஒடபானை அரிசி கூட்டே. 1

கூட்டப்பா சோம்பும் லவங்கப் பத்திரி
கூறுகிறேன் சாதிக்காய் சுக்கென் வாந்தான்
நாட்டப்பா சீர்களுக்கு சமந்தான் செய்து
நலமான பரங்கிப்பட்டை களுக்கு நாலு
நீட்டப்பா அசுவகந்தி களுக்கு இரண்டு
நிலையாக சூரணித்து வடிகொண்டேதான்
பூட்டப்பா ஆவின்பால் நாளி விட்டு
பொதிந்துநிற்றின் தினமொருநாள் வைத்துப்பாரே. 2

வைத்திட்ட சூரணத்தை அதுவின் நெய்யால்
தொடர்ச்சி இல்லை.

201. அர்த்தநாரீசுரன் மாத்திரை.

கோரோசனை மனோசிலை கெவுரி நாவி
இறையாமே லோரொன்று களஞ்சியோடு
சேரான திரிகடுகு திரிபலையுந் தானும்
நிறையோரொன் றிருகளஞ்சதாக அத்தி செய்து
சீராக ஏர்மெழுகு யாண்டிச்சாத்தி யரைத்து
திறமாக குருகையினா களவுவிது ஏற்றி
தோறாத வாதத்துக்கு அநுங்கள் தீர்க்க
தொகுத்தமுன் அர்த்தநா ரீசன் தானே. ௧.

அர்த்தநா ரீசன் சொன்ன
ஆனதோர் குளிகை தன்னை
சித்தமாஞ் சீனி பற்று
பணவிடை நிறுத்துக் கொண்டு
அத்தமா முலைப்பா லாலுக்கு
தோய்த்திடும் பிழிந்து கொண்டு
அ. இத்துடன் குளிகை பாதி
யடக்கிடும் பாக மாமே.

௨.

யேகுமிப் பாதி வண்டை
இப்படி மருந்து ணனி
போகுமிப் பாகம் காசம்
திகழ்பெற உலகோர்க் கெல்லாந்
தாகமும் கொதிப்புந் தீர்ந்து
சாந்தமா மென்றா ளாவிவ்
வாகுடன் கொடுத்துப் பார்த்தான்
வயித்திய வரிசை தானே.

3.

௨௦௨ வயித்துக் கடுப்பு கிராணி கழிச்சல் அதிசாரக் கழிச்சலுக்கு கருவேப்பிலை லேகியம்.

இளநீர் - படி -1, அக்கி - பலம் - 2, கரு-
வேப்பிலை ரூ.1. இந்த மூன்றையும்
அந்த இளநீர்த் தண்ணீரிலே இடித்துப் போட்டு
அரைவாசி வத்தக் காச்சி வடிகட்டி
இதில் சேர்க்கிற மருந்து - சாதிக்காய் - ~~விராக~~
-னிடை -1, கிராம்பு - விராகனிடை -1,
தாளிசபத்திரி - விராகனிடை -1, அதிவிடையம் -
விராகனிடை -1, காட்டாத்திப்பூ - விராகனிடை -1
கருவேப்பிலை - விராகனிடை -1, இந்துப்பு -
விராகனிடை -1, கசகசா - விராகனிடை -1
இதுவெல்லாம் யிளநீர்க் கஷாயம் விட்டரைத்து
அ. ஒரு பணிஎடை ~~[illegible]~~ ~~[illegible]~~ சுட்டியையக்

கழுவி அரைத்த மருந்தையெல்லாம் அதிலே
விட்டுக் கலக்கி கொதிக்க வைத்து
பசுவின் நெய் ஒரு தூக்கின்னம் விட்டு
வேகிய பதத்தில் இறக்கிக் கொள்ளவும்
களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும்
இதுக்குப் பத்தியம்:- கைப்பு, புளிப்பு தவிர்த்தும்
வாயு பதார்த்தம் தள்ளவும். இதுக்குத் தீரும்
வியாதி:- வயத்துக்கடுப்பு, கிராணி, கழிச்சல்
அதிசாரப் போக்கு இவையெல்லாந் தீரும்.
இது கைகண்டது.

---

205. எலும்புருக்கி, பிரமேகம், பித்தமேக
தாது விருத்திக்குக் காமரசம்,

தாது விளம்பு முருங்கைப்பூ
சொன்னவும் வகைக்கோர் நீராழி
பாத நெருஞ்சி ரெலம்கிலப்
பணைவேர் வகைக்குப் பலமாகப்
மோது மதுரம் நன்னாரி
யொவ்வோ ரிரண்டு பலஞ்சேர்த்து
போதுஞ் சதாவேரிக் கிழங்கும்
புகழு மிரண்டு பொடிசெய்யே.

செய்யே பசுவின் பாலதக்கு
திறமாய்த் தானீ தனில்விட்டு
மையுஞ் சீனிச் சக்கரையும்
வாகாய்ப் பலநா வதில்கூட்டித்
தொய்யு நறுநெய் நாளையதில்
அண்டி யிளகி வரும்போது
கையா லெடுத்துப் பார்த்தபின்பு
அருந்தும் பொடியைத் தூவிடவே.

தூவி மெழுகு பதத்திறக்கித்
தோகை மருந்தின் வகைகேளாய்
மேவும் பெரும்பா டெலும்புருக்கி
மிகுந்த பித்த பிறமேகந் ! ர
தாது மிகவே வலுவாகும்
தவறு முப்பும் புனியாகா
மாவுந் தெரிந்த பொதிகைமுனி
மறையோ நுரைத்த வளமிதுவே.

மேகத்துக்கு உறை மோரு பண்ணு
விபரம்.

பச்சை வெட்டுக் குங்கிலியம் பலம்-5, பசுவின்பால்-படி-2, பால் சாம்பிராணி-பலம்-1, பசுவின்நெய்-படி-1, கன்னார்-பலம்-3/4, கற்பூர சலாசத்து-பலம்-3/4 எலுமிச்சம்பழம்-32 யிவைகளையெல்லாஞ் சேர்த்து உறை மோரு கூட்டுகிற விபரம்.

பிள்ளைவிழ மருந்து.

சிணப்பம் விதையை வேகவைத்து சாற்றை வடித்து எள்ளு பதம் கூறிய அண்ணாம்புல் நுனையப் போட்டு அந்தச் சாற்றைக் குடிக்க பிள்ளை உடனே விழும். இது மெய், கைகண்டது.

---

206. ## அரையாப்புக் கட்டி கரைய மருந்து.

கருங்கொரகண், பெருங்காயம் குப்பைமேனிச் சாற்றிலரைத்துக் குதியின் தேய்க்கவும். கரைந்து போம்.

மேலும் ஆடுதின்னாப்பாளை, உள்ளி துரும்பு நல்லெண்ணெயில் பொரித்து புங்கன் வேர்ப்பட்டைச் சார் பிழிந்து குழப்பி மெல்லிய சீலையிலூட்டி புண்ணை கழுவிப் போடவும்.

புழுவெட்டுக்கு மருந்து.

சீனக்காரம், மயில்துத்தம், கடல்நுரை இந்த மூன்றுஞ் சரியாய்க் கூட்டி பசுவின் வெண்ணெயில் போட்டு பால்சுங்கி கொண்டு பிழைத்துக் கண்ணிலிட புழுவெட்டுத் தீரும்.

அ. மேகநாதன் வெண்ணெய்

பச்சைவெட்டிக் குங்கிலியம் பலம் - 1
இந்த ஒரு பலம் குங்கிலியத்தையும் நன்றாய்
பொடி செய்து ரெண்டு தரம் வடிகட்டி
பசுவின் வெண்ணெய் விளாங்காயளவு
கொண்டு வந்து அந்தக் குங்கிலியப்
பொடியை பசுவின் வெண்ணெயில்
போட்டுப் பிசைந்து ஒரு தட்டச்சட்டியில்
தண்ணீர் ஊற்றி பிசைந்து பிசைந்து
ஏழுதரம் நன்றாய்க் கழுவிப் போட்டு
பூவன் வாழைப்பழம் கொண்டு வந்து
அந்தப் பழத்தில் வெண்ணெய் ஒரு
நெல்லிக்காயளவு வைத்து பன்னிரண்டு
நாட்கள் சாப்பிடவும். இதுக்குப் பத்தியம்
புளிப் புகை யாகாது.

---

207. கிரந்தி, சூலை யாதுக்கெல்லாம்
காந்தபற்பம்

காந்தம் - விராகனிடை - 3, ரசம் -
விராகனிடை - 2, கெந்தகம் - விராகனிடை -
2, திரிகடுகு - விராகனிடை - 6, சித்திர-
மூலம் - விராகனிடை - 2, சாதிலிங்கம் -
விராகனிடை - 2, ஜீரகம் - விராகனிடை - 2
இவைகளை சுத்தி செய்து சூரணம்
பண்ணி தேனில் சாப்பிடவும். இதுக்குத்

தீரும் வியாதி - கிரந்தி, சூலைப் புண்
இவையெல்லாந் தீரும். கைகண்டது.
இதுக்குப் பத்தியம் - உப்பை தள்ளிவை-
-யால் வறுத்த பசுவின் பாலுஞ் சோறும்
சாப்பிடவும். இப்படி பனிரண்டு நாட்கள்
சாப்பிடவும். நாற்பத்தெட்டு நாட்களுக்கு
காரப்பான் ~~கிரந்திப்~~ பண்ட மாகாது.

அ. அரவின்வாதி லேகியம்.

வில்வ வேர் - பலம் - 20, இருந்தொட்டி-வேர், தூதுவளை வேர், நிலாவரை வேர், சித்தாமுட்டி வேர், செந்தொட்டி வேர், சிறுக்கீரை வேர், பொன்னாங்காணி வேர், வெள்ளைச் சாரணை வேர், கண்டங்-கத்திரி வேர், நன்னாரி வேர் ஆக வகைக்கு வராகனிடை - 10. தண்ணீர் பதக்கு எட்டிலொன்றாய்க் குறுக்கவும். /ஙு

இஞ்சிச் சாறு - படி - 4, சீனிச்சர்க்கரை-பலம் - 10, சடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, வலம்புரிக்காய், நெல்லிப் பருப்பு, மர-மஞ்சள், கற்கடக சிங்கி, கஸ்தூரி-மஞ்சள், தான்றிக்காய், உகைநீறு, வாய்விளங்கம், ஏலம், அதிமதுரம், சாதிக்காய், சாதிபத்திரி, சிறுநாகப்பூ,

பரங்கிப்பட்டை, கோரோசனை, குமடம்
கொத்தமல்லி, இலவங்கப்பட்டை,
208. கருஞ்சீரகம், லவங்கப்பத்திரி, வெந்தயம்,
சுக்கு, மிளகு, திப்பிலி, கிராம்பு, கடுகு-
ரோகணி, கடுக்காய், சதகுப்பை,
நன்னாரிவேர், கோஷ்டம் வகைக்கு
விராகனிடை - 30,

தேன் படி-1, ஊசிக்காந்தம்- விராக-
-னிடை-10, வெங்காரம் - விராகனிடை-10
முந்திரிப்பழம் - விராகனிடை-10, பேரீச்சம்-
-பழம் - விராகனிடை-10 யிதுவெல்லாந்
சூரணம் பண்ணி தேன் விட்டு பதமாக
லேகியஞ் செய்து கொண்டு பதனம்
பண்ணி களச்சிக்காய் பிரமாணம்
சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி -
அஸ்திசுரம், கைகால் வீக்கம், கண்-
-ணெரிவு, சோகை, பாண்டு, மகோதரம்,
விஷபாகம், மேகசூடு, அஸ்திகாந்தல்
யிவையெல்லாந் தீரும். இதுக்கு பத்தியம் -
புளி, புகை, வாயுவான பதார்த்தம் தள்ளி
வாடவும்.

அ. சூதக வாய்வுக்கு மருந்து.

தானையும் வெள்ளுள்ளி தப்பாமல் சுப்புசிந்து
தேன்னைக்கண் கிட்டு வேகவைத்து - காணையும்
சாந்தியடன் - கரைத்து மாந்தனீர் குடிப்பீராய்
அந்த வாய்வமென்னை மாண.

209. மருந்தீட்டின் குணம்.

வந்திடும் மருந்தீட் டானால்
வாய்வெளுத் துவர்போ லூறும்
அந்தியும் பகலு மொன்றா
யடிக்கடி யிருமும் வற்றத்
சந்திடும் வேர்வை நீர்போல்
தெரிவையா விதைத்தின் கொட்டுக்
கந்திடு மேனி நொந்து
கருத்துற வாடு மென்றே. 1.

மிக்கதோர் பாம்பின் னையால்
மிகுத்தவன் கருவன் நெய்யா
லொக்கவே யறணை யொந்தி
யுண்டதோர் பணத் தாலே
திக்கதோர் சிறுபுஞ் சாலச்
சுருவிடும் தேகம் வாடும்
முக்கிய மிகுவே காணு
முருகிடு மருந்தீ டாமே. 2.

மாதாதன் கொட்டி யானும்
வளவினிற் காசிக்கோற் றாலுஞ்
சூதக மான மாதர்
தடக்கையா லுணர்க்கை யாலு
மாதவ னாகப் பற்றி
யடங்கிடும் நெஞ்சு தன்னிற்
சீதவா மொழியி னாலே
செய்பிடு மருந்தீ டாமே. 3.

உண்டதோ நஞ்ச மான
அ முவட்டிடு மாறுகி யோறுந்
தண்டியே யாருமென் வந்து
சாரம்போ லாறுங் கோடை
மண்டியே நெஞ்சக் கட்டி
வளர்ந்திடும் தீயணைப்போ லுன்னை
கண்டமே நத்தமே போல
தவறிடுந் தீவண் றானே. 4.

வேர்த்திடும் நெடுவை டென்னும்
விம்மிடும் வாய்வும் போதச்
சார்த்திடு முனை தன்னிற்
தன்னைத்தா னறியப் பேசுந்
சித்தமெய் திருவி சேர்ந்து
தொங்குதி நாக வொருக
பார்த்திட ரிதனை வேண்டிப்
பண்டித ரறியா னோவே 5.

அளத்திடும் நெஞ்சி லுள்ளே
ஆசைகள் பலவும் வேண்டும்
முளைத்திடு முதிர மஞ்ச
ஞடவிஞ்சு நீறு தாட்டுங்
களைத்திடுஞ் சோகை யற்றித்
தமரிரு முடவி லுள்ளே
முளைத்திடு பித்த வாத
மையமே மருந்தி டாமே. 6.

ஏழையு மிருமன் தோன்றி
வெறுத்திடு முடலிற் சாருந்
தாழையுந் தாறு போலத்
210 தின்றுள்ளே யூறுங் கோழைக்
காழையான் வந்து பற்றிக்
கருதிடு வாண்டு தன்னில்
கோழையும் தீரும் வற்றிக்
கொதித்திடும் நெஞ்சி னுள்ளே. 7.

தீயது நெஞ்சி னுள்ளே
தோய்கிடும் வாந்தி போல
வாயது நாறுங் கோழை
மயக்கிடுந் தியக்கும் வேர்க்கு
மாயமே யாதுஞ் செய்த
வர்மமோ காணோ மென்பார்
தீயவா மடவார் செய்த
திதமிது மாறண போகும். 8.

சீதக் களப முலையாள்தான்
தெருவை மாத ருடன்கூடி
மேதக் காரிய மிடத்தானும்
விரும்பு மருந்தக் கிணைத்தாலுஞ்
சேதப் படுத்தி வினையுண்டாந்
தீவனா சினைவு முன்கிரன்னில்
மாதர்க் கிதமே தொழிலாக
வகுத்தான் பிரமன் வகுப்பாலே. 9.

இதுக்கு மருந்து (மருந்தீட்டுங்கு)

ஏகாகி வெந்த மருத்திடு
மிதவைக் கொருநாட் கரியாக்கி
மாதா ளரும்புங் கண்கொண்டு
வடித்தே யருப்பு படிதனிலே
அ வேதா அணுகுங் கரிப்பானை
மிக்கக் களங்கந் தணிவைத்துப்
போதாய் விடுந்த அடனைழுந்து
பொருந்த வடித்துக் குடித்திடுமே. 10.

சியமக்கினி குமாரன்

நல்ல நாவி யொன்றரெண்டு
நலத்த சினையா ரதனாறு
சொல்லுங் கெந்தகம் எட்டாக்கு
துலங்குங் காந்தம் பதினாறு
வெல்லு மனோபொடி பண்ணாங்கு
கிளைந்தே யந்திச் சாறுதனில்
வல்ல பழையே அரைத்ததனை
வாகாய் வழித்துத் தான்திரட்டே. 11.

திரட்டே யொண்டத் தினையை
திறமாய் மூன்றின் தாண்பொதிந்து
முரட்டாய் நாறு அத்தியொரு
மூனை தனிலே வைத்திருக்கப்
பிரட்டே யன்னத் தீயெரியும்
பொறுத்தா லாறிப் பின்னெடுத்து
மிரட்டே செய்யு வியாதியன்றே
விடவே யொடுங் கண்டீரே. 12.

கண்டீர் இன்மைக்கேணை பெருவயறு
கதித்த பித்தங் காமாலை
இண்டல வாய்வு குடல்வாதங்
குடல்கரி யேப்ப மிணையுமலீ
அண்ட வாய்வு யாராக்கைணிப்பு
அக்கினி மந்தமண்ட பிணிகையுங்
கண்டு சொன்னோ மிவையெல்லாங்
கருதிச் செய்யும் பெரியோரே.

---

21. அரமத் தொழும் கன்னியின்
பூபதி மாத்திரை.

மடலரி தாரந் தேதம்
மனோசிலை சாதி லிங்கம்
விடமது பொன்னூ மத்தை
வித்து கெந்தகம் வெங்காரம்
திடநமச் சாரந் துத்தந்
திரிகடு கிலவங் காந்தாணீ
கடுகு ரோகணி வெந்த
கதாயத்தி லரைத்துக் கொண்டே.

1.

கொண்டிட யாத்திச் சாற்றில்
குறித்ததை நாலு சாமம்
தண்டு யூமத்தஞ் சாற்றில்
தானதை நாலு சாமம்
இன்றிபோ லுண்டை செய்து
கொடுத்திட அனுப்பா னங்கேள்
வென்றிடு மிளகி யாத்தி
வெந்த னீர்த்தனி லூட்டே.

2.

ஊட்டுவாய் அன்னி வாதம்
இன்றேல் மதிசா ரங்கள்
ஓட்டணை கிராம்பு ஓட்டி
உறைத்திடத் தீருந் தீரு
மாட்டிய வெண்ணி தோஷம
வறட்சியும் விக்கல் தீரும்
காட்டு தேத்தாண் விதையரைத்து
கலந்து நவநீ தங்கொடே. 3

கொடுப்பா யின்ன மந்தாரங்
குழைப்படு வெண்பல பிழைநோய்
வெடிப்பாங் கூனை கருவிழிநோய்
மீறுஞ் சயங்க ளிதுதீரா
அடிப்பாய் நொச்சி குப்பைமுத
எடுப்பா னந்தைய் ஆன்விழியே
யெடுப்பாய் அன்னிவாதம் பதுமொன்று
யின்னை யாந்திச் சாற்றாலே. 4

<u>வைப்பு மாரண பற்பம்</u>

வசவாதி யனைவாங்கச் சாதிக்காய
மருதமய
அவின்கந்தா வெங்காரம் கிராம்பு காந்தம்
அசமோதகத் துடனே அக்கிராக் காரம்
அதி

வெட்டு மாறனை பற்பம்.

வசீவாசி யளவாங்கந் சாதிக் காயும்
⊗ பின்/ மஞ்சிடைய அ…கஞ்சா வெங்காரம்
கிராம்புகாந்தம்
அசமோதகத் துடனே அக்கிரா காரம்
அதிவிடையம் குரோசாணி சூடந் தானும்
பகையான முன்மருந்து பதினொன் றோடும்
⊗ பாதியது ஊமத்தன் வித்து லிங்கம்
௨1௨. திசையாகக் கூட்டுநன்றாய்ப் பற்ப மாக்கித்
தேனிலே பணவிடைதான் கொள்ளு மே. ௧.

கொள்ளுகிலே கழிச்சலுடன் கடுப்பு நீர்குத்
குணமாகுஞ் சுரமுழுதுஞ் சன்னி யோடு
. . குண.மேதி அதிசாரங் கிராணி குன்ம
மேலேப்பு ...ள்ளுலம் ரோகந் தீருந்
தின்றுகின்ற மருவலப்.பட.....ய் நாய்க்குந்
துரத்திவெட்டு மாறனை பற்பஞ் சொன்னோம்
தெள்ளுமிர்த ...விந்து மன்ற கோமான்
திசைமுழுதும் விளங்குகின்ற பற்பந் தானே. ௨.

மேகனாதன் குளிகை.

மேதினியோர் வாழ்க வென்று
மேகனாதன் குளிகை கோளாய
...வாய்விளங்கும் வெங்காரந்
சார்ந்த அக்கு திப்பலிய
⊗ மாதே மிளகு இந்துப்பு
வசம்பு கா..... ⊗ .....ரேர்
ஆதி சிவனை கொருடனே
அசமதம்வாய் விளங்குந் தானே.

மேகநாதகுளிகை வெள்ளை… பார்க்கவும்.

1.

அ. தானே ...சா.. யம் ரோகணியுஞ் சேரு
மெனிடையா கம்பழுத்தா னைக்கும் போது
.... நேர்வானாஞ் மெனையக் கூட்டிக்
இருக்கையது பிரமாணங் குன்றிச் சேடு
வேதனை ...இதுள் நீதின்ற ....
விக்கல்சுரம் அக்காசம் கடுக்காய் காசம்
ஆணுகின்ற ... சிரகத்தின் சீரண
மந்த மன்னா மடாங்கிப் போமே
வு.

போகுமே அ... ரோம் பிலிகை
வேராம்பல் பெருவயிறு நொச்சிச் சாறுங்
யேகுமே யிறு..... கூட்டங் கிருமி
யயன்பாய மேனுத்தி னழி யானே
வாகுபெரு குருமுனி ... னானே
மாணிக்கத்தின் விக்குணங்கை வழுத்தி னேனே
௩

வாதபித்த சிலேற்பனம் வருகிற
லட்சண மாதும்.

வாதமது வர்த்திக்கும் வந்தாண் ஆடியிலே
கோதறிய கன்னியிலே இரத்தானிர்யவா..க்கும்
213. நீதமாகு ஆர்ப்பசி க்கிவ் கார்த்தி கைக்கு
மாகச்சகுணிகேமை சொற் பசையுந் தென்னை
யிரவுன்,

பித்த வகைதனை யாகப் பெருக்கினான்
ஒத்த ஆவணி யொன்புரட் டாதியுள்
மத்தின் கோபமே யற்பசை கார்த்திகை
தத்து மார்கழி தன்னிற் மிக்குமே.

மாசியொடு பங்குனி யணையருந்தான் வர்த்திக்க
வைசியாரும் மாசேடறும் வெண்கோபம் — வாசிரும்
ஆனியாறு மாடியாறு மாகச் சமற்வென்று
மானின் விழியாய் மதி.

பத்துந் திரிதோஷம் பயமைப் பாகாதுங்
சொற்றிவரு மைக்கை சிறுகார்செய் — போற்றிடு
வாதந் தணக்கிறவாம் வண்பித்தத் துக்கைச்சி
யோது மருந்தென்றே யுரை.

காரென்று அக்கு கடுகொடு திப்பலி
நேரொக்கக் கூட்டி நிற்றவும் உண்பின்
அ. ஊரொக்கக் கெடுத்து உம்பர் சிற்றம்போன்
பேரொக்கக் கெடும் வடுநீ வயாதியே

மாதேவிக்கு எண்ணெய்
விபரம்

உதியம்பட்டைச்சார் படி - ௰, கருவேலம்பட்டைச்சார் படி - ௰, நல்லெண்ணெய் படி-௰, தேங்காயெண்ணெய் படி-௰, [illegible] வசம்பு, மெழுகு, அவனி, கடுக்காய் இங்கிலியம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கோஷ்டக்கட்டி, சித்தம், துருசு, கொத்தமல்லி[illegible], கார்போகரிசி, வெட்பாலரிசி, ஏலம், வாய்விளங்கம், வாலுளுவையரிசி, [illegible] அதிமதுரம், வெம்பாடம்பட்டை ஆக வகைக்கு ௧ விராகனிடை - ௧, நஞ்சண்டாம் பட்டைச்சார் படி-௰, பெருமரத்துப்பட்டைச்சார் படி-௰ — பொன்னிறமாய் காய்ச்சி ரக்கின் நசியம் பண்ண புண்ணுக்கும் பூசவும். மாற்ற ரணத்துக்குமாம். இது கைகண்ட வித்தை.

214-வது ஏடு விடுபட்டுள்ளது.

---

215. ## வீரியத்துக்கு

முடக்கொத்தானிலைச் சாறு வாங்கி பச்சரிசி யூறப்போட்டு 3 சாமம் வாடுங்க விட்டு. இடித்துப் புட்டுவைத்து யெரித்து பசுவின் நெய் விட்டுச் சாப்பிடவும். இப்படி பன்னிரண்டு நாட்கள் சாப்பிடவும் பத்தியமானால் நெய்விட்டு சாப்பிடவும். இந்தமுறையில் சாப்பிட்டால் நாற்பது வருடத்திற்கு வீரிய விர்த்தியுண்டாகும்

ஆசனப் பவுத்திரத்துக்கு

செம்பிரண்டைக் கிழங்கு, புளிப்பிரண்டைக் கிழங்கு, நல்லபிரண்டைக் கிழங்கு இவை மூன்றையும் சமன்பட நிறுத்துப் போட்டு யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு ஒருபடி யெடுத்துக் கருங்குருவை யரிசியாவது ~~சம்பாரிசி~~ உம்பாவரிசி யாவது கூடப் போட்டு யிடித்து களிக்கிளறி தின்னவும். தின்னும்போது வெந்நீர் வார்த்துக் கொண்டு யீரம் உலருமுன்னே
அ. மருந்து தின்னவும். இந்த முறைக்கு மூன்று நாட்கள் கொள்ளவும். பத்தியமாக இருக்கவும்.

கிரந்திமேகம் அக்கரை சோகை இவைக்கெண்ணெய் தீர்த்தைலம்.

கெந்தம் - பலம் - 5, நவச்சாரம் - விராக-னிடை - 2, சவ்வீரம் - விராகனிடை - 2, வெடியுப்பு - விராகனிடை - 1, அரிதாரம் - விராகனிடை - 3 யிவைகளையெல்லாம் பசுவின் நெய் விட்டு அஞ்சு நாழிகை அரைத்து வெண்கிண்ணியா யொடமு தீயில் வைத்துப் தயிலம் வாங்கும். அந்தத் தயிலத்தை கற்கண்டு ~~[illegible]~~. ஆகிலும் தேனாகிலும் பணவிடை கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி குட்டம், சோகை, பாண்டு, குன்மம், கிரந்தி, மேகம் தீரும்.

பத்தியம் - புகை, புளி தவிரவும். உப்பு வறுத்துப் போட்டுக்கொள்ளவும்.

---

216. ## கிரந்தி மேகத்துக்கு எண்ணெய் வைக்க விபரம்.

சீர்பெரு சிவனார் திருவடி தொழுது
தேர்பெரு திருமந்திர் செய்யு மியல்பு
ஓங்கு வியாதியின் ஓடவே பாரில்
பாங்கு கஸ்தூரிப் பட்டையும் நிறைதான்

அந்த வராகன் ஆகாச தெருடன்
பராங்கியன் பட்டை பகர்கருங் கீழும்
ஆர்தருங் கீர்த்திரோர் உயர்தரு கவ்சாரத்தின்
வகையொரு பத்து வராகனு மாக
தெக்கத்துள்ள ஏ.ருள்ளி சேர்ந்தொரு பொருந்தான்
நக்க இடித்து உயர்குப்பை மேனி
தக்க சார்விட்டு தான்.... அதைத்து
இருவிளக் கெண்ணை யொருபடி தான்கூட்டி
அடுப்பு யேத்தி விளங்கவெரித்து
மெழுகதின் பதத்தில் வெந்ததை யிறக்கி
தொழுது கணபதிக்கு சொல்லொர் அரிசி
அ. பாக்கு வெத்திலையும் பொற்காணிக் கையுந்
தாக்கிய தூபந் தானது கொடுத்து
யெடுத்திது கரண்டியின் யெண்ணையைக் கொடுக்க
குடித்திடும் வேதி வெண்ணீருந் தோடும்
உண்ணவும் மாயப் புளியப்பு மனாது
நின்னைய மாறுநாள் நேர்விளக் கெண்ணெய்
செய்த்தால் போலவே சீர்பெற புழுதி
காதலி யுடனே கணவனும் யெண்ணை
சாதக மாகத் தானதை அருந்தி
அவபத்தி யமா. தேடுநா ளாதா

சிவசுத் தியமாய்த் தீரும் வியாதிகள்
சீதக வாய்வு சூடரணை யாப்பு
பேரத்த கிரந்தி புண்கு னையும்போம்
பிள்ளை யன்னாப் பேர்களுக் காகுங்
கள்ளக் கரப்பான் கடுரோ கங்களுந்
தீரும் பிரமனைத் திருடனைச் சேர்ந்த
காரினை பேர்கொள் கருரே விருட்சம்
பார்த்தனின் காய்த்திடா பாலுண்ண மறந்தான்
அதனிடம் பிறணி அதை கழுத்தூர்
பட்டைதா னென்று பகர்ந்தனர் முனிவர்
அறிந்திது செய்தால் அதனைவிகள் பறந்திடுங்
கைகண்டது பகர்ந்தோமே.

உஷ்ணம் தெந்துக தானிக்கி எண்ணெய்.

தாரணைங்கமன் சீதகத்தொடு சாதிக்காயொடு ஏலமும்
கோரு - கிராம்பொடு கொருட பச்சியும்
தான்வகைக் கிருவி ராகனே
தீர்பொருந்திய தென்னையும் சிறுகீரையும் பழம் பாசியும்
செய்கொடுப்பையும் அகத்தி அய்வகை
சேர்த்திடுக்கு சாறுசித்துவை

நீர்பொருந்திய வெள்ளைப் பானூர்
நீர்விளக்க எண்ணெய்த் தானூர்
நிஜமாகவே மெழுகினின்று பருகு
நீதியாக வருத்தமின் ஆர்கரண்டிகைகள்
அந்திசந்தி உண்ணவாய் கிரந்தியும்
உள்அரத்தொடு கைந்தாளியும்
உன்ன ரோகமுந் தள்ளுமே

மேகம் இருபத்தொன்றுக்கும்
கிரந்தி, சூலை முன்னூத்தறுபதுக்கும்
குழந்தை சுரம் மாந்தத்துக்கு
எண்ணெய்.

வெண்ணொச்சியிலை, சங்கிலை, அம்மான்-
குப்பாயிலை. தின்னியிலை, துளசியிலை, செருப்-
-படையிலை, பாவட்டையிலை, வாராவிலை,
கினிச்சியிலை, சிறுதேள்கொடுக்குயிலை,
குப்பைமேனியிலை, மணத்தக்காளியிலை,
கற்பூரவள்ளியிலை, வெள்ளருகியிலை,
கொட்டப்பாக் கிரந்தியிலை, சிவகிரந்தியிலை,
வெள்ளாறையிலை, கோழியவரையிலை, சிறு
யிண்டயிலை, வேளையிலை, நாய்வேளை-
-யிலை, முடக்கொத்தானிலை, முன்னையிலை,
திருமுன்னையிலை, நன்துளசியிலை.

கருந்துளசியினை, வட்டத்திருப்பியினை,
கையாந்தகரையினை, கஞ்சாங்கோரைக்
கிழங்கு, பேய்மிரட்டியினை, சிறுபுள்ளடியினை
அடுதின்னாப்பாளை, பிரமியினை, வெப்பினை
புங்கினை, நெருஞ்சியினை, சிறுகீரையினை
ஆக வகைக்கு ஒவ்வொரு இத்து கொண்டு
வந்து விளக்கெடுத்தியினை, அமுக்கிரா-
யினை, கண்டங்கத்திரியினை, தூதுவிளை-
யினை, ~~மின்னாகு பீடுயினை~~, நிலையாவரை-
~~யினை~~ யிலை யெண்ணெய் படி-நாலு மனுஷ
அமுரி, தேசி அமுரி, பசுவின் அமுரி
இந்த மூன்றும் முன்சொன்ன பச்சிலையில்
விட்டு ~~[illegible]~~ துவைத்து சார் வாங்கி
எண்ணெயில் விட்டு 3 வியில் வைக்கவும்
அதன் பிறகு சித்திரமூலம், நிலப்பனைக்
கிழங்கு, சீந்திக் கிழங்கு, அருகின் கிழங்கு,
அமுக்கிராக் கிழங்கு, தொழுகண் கிழங்கு,
ஆகாசக் கெருடன் கிழங்கு, புங்கம் வேர்,
சங்கம் வேர், மாவிலிங்கம் வேர், வெப்பம்-
பட்டை, கண்டங்கத்திரி வேர், தூதுவளை-
வேர் யாந்த [illegible] வேர் வகையெல்லாம்
வகைக்கு பலம்-2 இடித்து நாலுபடி
தண்ணீர் விட்டு யெட்டொன்றாய்க்
குறுக்கி எண்ணெயில் விடவும்,

மேற்படி கடைச்சரக்கு — ப. நெல்லி
வெள்நெல்லி, மிளகு, சீரகம், வேப்பலை
அரிசி, நீரடிமுத்து, பறங்கிப்பட்டை, கஸ்த்-
-தூரி மஞ்சள், கற்றாழை மடல் சோறு.
ஆக இந்த வகை பலம் -1 இவையெல்லாம்
அ. முன்சொன்ன அமுரி விட்டு அரைத்து
எண்ணெயில் போடவும். மெழுகு பதத்தில்
காய்ச்சி இறக்கவும். இந்த எண்ணெயில்
X இரண்டு வீராகன் எடைக்கு பூரம் நுணுக்கிப்
போடவும். இதுக்குத் தீரும் வியாதி -
மேகம் இருபத்தொன்றுக்கும் கிரந்தி,
சூலை முன்னாத்தருபதும் குழந்தை சுரம்
மாந்தம் இவையெல்லாம் தீரும்.

சிறுவங்க பற்பம் வைக்கும் விபரம்.

சிறுவங்கம் அஞ்சு வீராகனிடை கட்டிக்
கொண்டுவந்து ஆவரை வேர்ப்பட்டை சாறு
பலம் கொண்டுவந்து இடித்து வங்கத்தில்
பொதிந்து மேலே கோணிப்பட்டுச் சுத்தி
செய்து ஒரு சீலைமண் செய்து ஒரு முழக்
குழி வெட்டி குழியடியில் நூறு எருவோடு
மேலே நூறு எருப் போட்டு தீப் போட்டுக்

படம் போட பற்பமாம். இதை கிழவில் உவர்த்தி
ஒருபதணி தண்ணின் அடைத்து வைத்துக்
கொள்ளவும். இது அநங்கள் சன்னிக்குமாம்.

சன்னி பதிமூன்றின் குணம்
~~சந்திகா சன்னியின் குணம்~~

சந்திகா அந்தகனுந் தருமருத்
தனுடனே சார்ந்த சித்ரம்
விந்தை சோர்சீ நாங்கம்
வசிபெடைய தாந்தரிகவ் கண்டகுச்சன்
கொந்தமறு சன்னி நாசத்
தொருபக்க மாத்ததர் சொன்பிறலாபம்
நந்திசேர் திங்கது நற்றீதின்
பணிபரதன் நான்ஞின் றான்றோ.

சந்திகா சன்னியின் குணம்
~~சன்னி பதிமூன்றின் குணம்.~~

வாக்கருங் கணபதியைப் பணிந்து சன்னி
வாதமொரு பதிமூன்றும் வகுத்துச் சொல்வாம்
வீக்கமுறுக் கத்துடம்பு மேல்மூச் சண்டாம்
மிகுமினை வேதனையாய்க் கொடிகாரும்
தாக்கம்வராப் பொலிக்கும் மந்தமாகும்
அ துடியாகும் ஆண்டாகும் நாளை முக்கி
தாக்கவருந் தயர்திரு மதுவின் பேரே
சந்திகா சன்னியென சாற்றும் நூலே

1.

அந்தக சன்னியின் குணம்.

விக்கல் சத்தி வெதுப்பொடு தாகமுந்
திக்க மெய்யுந் திமைய நடுக்கமுந்
துக்க மத்திரு ணாளொரு பத்தினில்
வய்க்கு மந்தக சன்னியின் வண்மையே. 2.

ருத்தகா சன்னியின் குணம்.

வருத்திய தாக மோகம்
மறதிமெய் நினைவா றோட்டந்
திரத்திணைச் சுழுத்தல் கூவல்
தீவெ ணாடி யண்டங்கள்
கருத்தொரு மிடர் நெத்து
கழுத்தினில் வேர்த்தல் ணோய்த
ருத்தகா சன்னி வாத
மிருபத்து னாள தாமே. 3.

சித்த விப்பிரம சன்னியின் குணம்.

சுத்தமாய்க் கூவும் பாடும்
சுந்தினோய் பிறவா மிக்கும்
மித்தர்போல் மித்தும் வாய்கண்
திமிர்ந்திடும் வெருவிச் செய்யும்
220. புத்திய மிகவுந் தாக
மோகமும் பொருந்தா நிற்கும்
சித்தவிப் பிரம சன்னி
திருநா ளிருபத் தொன்றே. 4.

தீராங்க சன்னியின் குணம்.

பாதாதி மெய்நடுக்குங் குளிர்ச்சி யுண்டாம்
பகர்மூர்ச்சை அதிசாரம் விக்கல் வாந்தி
தீதாகச் சந்துகளெல்லாம் குடைவுங் கம்மும்
திருக்கிடவே யெழுந்திரிக்கும் அவசமுங்கம்
மோதாதே செவியிரைப்பும் பதினைந்-தினொடு
மொருமவே திணைக ளொடாக் காண
தீராங்க சன்னியாது நமனா ரென்றே
செப்பினார் தன்வந்திரி தானறிந்த பேரே
5.

தாந்திரிக சன்னியின் குணம்.

வாய்ந்தவிழி யுமைபூடும் மலரும் வாக்கும்
வயிறுலோம் கழுத்துமுகம் நொந்து சோம்பும்
அ. யேந்துயமுள் ளென்கறுத்து நாக்கு மேனி
யிருண்டநிற மாந்தினவுக் களித்தி துண்டாம்
மெய்ந்திருந்தா கிரிவெசங் கண்ணீர் பாயும்
மூர்த்தவிதல் துண்டுக்கு முயங்குங் காணாய்
தாந்திரிகச் சன்னியதா லிருபத் திருசே
தப்பியுயர் தப்புமெனச் சாற்று வானே.
6.

கண்ட குச்சந் சன்னியின் குணம்.

தொண்டை விம்மி மெய்நடுக்குஞ்
அருமிண் டாக்கு மதிமயக்கு
மிண்டி வேர்க்கும் நீர்கேட்கு
மியார்ப்பு மூர்ச்சை யுளதாகும்
மண்டி தலையின் வலிகாட்டும்
வசனங் கோணும் வாயுளரும்
கண்ட குச்சந் சன்னிக்கு
கருதிப் பார்ணாள் பதினென்றே. 7.

கண்ணிகா சன்னியின் குணம்.

தன்னின் வழிந்து சுற்றுந்
தனுவது நடுக்கு நாக்கு
மின்னியே வெடித்து மேனி
வெதுப்பிடப் பித்து ளத்தி
மன்னிய கழுத்தை விம்மி
221. மணிக்கைக் திணவுண் டாக்கி
கண்ணிகா - சன்னி திங்கள் மூன்றி
யேழினில் [illegible]ந் தானே.

8.

~~இருத்தகா சன்னியின் குணம்.~~

இரத்தகா சன்னியின் குணம்.

விரிந்திடு நாவின் முள்ளு
வெடித்துநா கருத்த ரத்தம்
பரித்திடும் விக்கல் வாந்தி
பண்ணுமெய் மறதி தாகம்
கருத்துறுங் காது மூர்ச்சை
காசமோ டதிசா ரங்கள்
யரத்தகா சன்னி பத்தே
னாளினி லுயிர்நில்லா தென்றே. ௯:

பக்கநேத்திர சன்னியின் குணம்.

கண்ணுடைந் துதிரம் வீழும்
கழுத்தடி சிரம் வேர்க்கும்
மெண்ணிடின் பேச்சுண்ண முன்னை
யெண்ணலாம் வெதுப்பு மிஞ்சும்
நண்ணிடும் மறதி பிரமை
நடுக்கிடு மங்க மெல்லாம்
பண்ணுறு தூக்கம் போலாம்
பக்கநேத் திரனா ளெட்டே. ௰.

பிறலாப சன்னியின் குணம்

மதிகெடும் வாருளத்த லாய
வெய்யாங் கூறும் வாயுளறும்

அ.

ப்ரலாப சன்னியின் குணம்.

மதிகெடும் பொருளற்றவாய் வெய்யவாய் வெறு
வாய்வருஞ் சடம்புளனை மயக்கமெய்தும்
பதநாங்கள் நடுநடுக்கும் த்வாஸ மிக்கும்
பலகாலுந் தாகமுன்றா யருமல் காட்டும்
கதிதரு நாடியனா லெங்குங் கண்ணைவெறிக்கும்
காணுகிலிது ப்ரலாப சன்னி கண்டாய்
யதுமுறவே பதினொருநாளின் தீரு
மென்று மருத்துவர்கள் பயம்ப லாமே. 11

ஜிங்ஹக சன்னியின் குணம்.

தங்குடல் பந்து நொந்து
தாகமாய்ச் செவிகே ளாது
பொங்கிய ஸ்வாச மிஞ்சிப்
பொலிந்திடும் நாவின் முள்ளு
தங்கிவான் போலத் தோன்றுஞ்
சுரமும் வேர்வை காட்டும்
ஜிங்ககன் பதினொரு நாளே
திருமென் றியம்ப லாமே. 12

பொதுப்பித்த சிலேற்றும மொத்தவாம்
மோதுநாத்—திரியா—பிணியோங்கிடும்
பொனைதயாய் முகம்வாடுந் துயிலு நாம
தீதி எப்பிணி அசாத்திய நாள்பதி னைந்தே. 13.

முன்சொன்னது சாத்தியம். பின்சொன்னது
அசாத்தியம்

(சன்னிபதின்மூன்றின் குணம் முற்றும்)

உ.உஉ. ## இருவகை அந்தக் கன்னியின் இனம்

வக்கின்ற நாத்தனாட்டி மேவுந் திவசோதி
பக்ககன்னி வாதம் பகருங்கால் - மிக்கபுளம்
மாமுனிவன் சொன்படியே கொகன்னி யாகுமெனக்
கூறுமுறை பாயதந்த அங் கூறும்.

வக்கணைத்தீ கன்னியின் இனம்.

வக்கிணா தன்னுக்கு வெடிவிக்க வுண்டாம்
வேண்டியரும் தொடுத்து கோழை காறி
அக்கவினான் பெற்றும் காதடியும் விங்கும்
காதவினா வடக்கிடரா னெழுந்து நிக்கும்
பக்குமுள்ள நான்பனி ரண்டே யாகும்
பத்தற மறிந்துநீ பார்த்துக் கொள்வாய்
திக்கவுடன் தேகத்து திமை காணாத்
தியங்குவார் கானா மடமாதே தீர்த்துப் பாரே.
1.

~~அ~~நாத்தனாட்டி கன்னியின் இனம்.

நாத்தடவுந் தருமோறு மிருமன் விக்கல்
நயமுடனே வாயாரிளகும் விடுவாது மாக
சேர்த்துமெத்த வாயாலே இதட்டிச் சீறி
வரிசைமுந் திரிபுரமனோர் மிகவும் காயும்
தோற்றமுறு நின்றவனை சூழ்ந்து பார்த்து
அம்மாபோ வென்றுசொல்லும் வினைக் கேட்பாய்
நாத்தனாட்டி கன்னிக்கு பதினாட் டேனாள்
நாப்பனாய் மருந்தருந்தி நாசிப் பாரே.
2.

சீவக சோதியின் குணம்.

சீவக சோதி முன்பிறந்து
சீர்த்திக் காத்து நாவலரும்
பாவைச் சகமுந் திருப்பமாய்ப்
பத்திக் கவசு மென்கொன்னும்
தாவக மான தாகமுண்டாய்த்
தனியா திருமேனி காட்டுகிம்
சீவக மான தாக்கமின்னை
சீரும் நாளு மொண்பதுவே. 3

கையுங் காலு மொருபக்கம்
கணத்துத் திமிர்ந்து கண்தூங்கும்
மெய்யு மறவே மெலிந்துவரும்
வெகின்டை வெண்டை நாவுந் தடுமாறும்
செய்யுங் குணத்தை நாடியக்கால்
தெளிக்கச் சன்னி வாதமென
உய்யும் வகையை நான்காணோம்
உலகோ ரறிய உரைத்தோமே. 4

வயிறு பொருமி விம்மி
223 வலப்புறந் தன்னிற் சுழுந்து
கயிறிய விழிகள் ரண்டுங்
கலங்கிடன் பரந்து நோக்கும்
குளிறியே நாவு தானும்
குழறியே பேச வொண்ணாம்
கயிறிய சன்னி வாதங்
கழுமா தங்கள் பத்தே. 5

அக்க சன்னியின் குணம் முற்றும்.

சன்னி பணிந்தெண்டுற குணம்.

ஊறிய திரும்பா சன்னி
குழிஅக மலட்டுச் சன்னி
மீறிய பயித்திய சன்னி
மிகுமுக வாத சன்னி
சீரிய பித்த மேகந்
சிலேந்திரம் வாத மேகம்
ஏறுகான் தீத்த நவ்யா
சன்னியைப் பணிந்தெண்டுந் தானே. ௪

திரும்பா சன்னியின் குணம்.

அய்யோ உடலை நோகுதென்னும்
அயர்ந்து கிடக்கும் கிளைக்காணும்
பொய்யே யல்லத் தவண்டுண்ணாம்
பொருந்தா தன்னம் பொருந்தாது
மெய்யே சொல்ல வெழுந்திக்கும்
மோனம் பொருளை நினைவாக்கிநு
தெய்தா வெண்ணே கைகொட்டுடு
திரும்பா சன்னி திரும்பாதே. ௫

அக சன்னியின் குணம்.

துணுக்கு துணுக்கா யெடுத்தெரிந்து
துகிலைக் கிழித்து கிரணைக்கு
மிணக்கின் கைக்கின் வசுவப்பம்
யேத்தான் முக்தில் துப்பவிடுந்
தனக்குத் தானே வகைகூறுந்
அ. தாங்காணுடன் நீர்மலந் திண்ணும்
குணக்கின் பழயே அகசன்னி
கருதிப் பார்க்க வேணமே. ௬

அலட்டு சன்னியின் குணம்

அலட்டுரு மறிவுண் டாகும்
அருகிருந் தாரைக் கேத்தும்
தலத்திடை யோட வெண்ணுந்
தணிச்சீலை கிழித்து வாங்கும்
நிலத்திலே நூலெந் தன்னை
நினைந்திடு மிருக்கை யானை
அலட்டுருக் சன்னி நாளைட
டாறிவன்ளோ மருள்செய் தாமே. 3

பயித்திய சன்னியின் குணம்

ஆடிப் பலகா லெழுந்திருக்கும்
உத்துப் பார்க்கும் நிலம்பிறண்டும்
வாடிக் கிடக்கு முயர்போக்கும்
வாய்விட் டலறுங் கொட்டாவி
தேடிப் போகத் திசை நோக்குந்
சீலை யரியுங் கிளித்தெரியும்
பாடிப் பாடிக் கைகொட்டும்
பயித்திய சன்னி யெனக்கருதே. 4

முகவாத சன்னி

நயனமுன் னாக்கு மூக்கும்
நாவன்ளே தந்தங் கோணும்
பயமதாய் வலிவ லிக்கும்
பல்களும் கடவாய் கோணுஞ்
மசணமு முறக்க மில்லாத்
தயந்துடன் வாய்நீர் பாயுந்
தயவில்லா முகவாத சன்னி
யின்குணம் சாற்றி னோமே. 5

பித்த மோக சன்னியின் குணம்

அனலெழு மேனி தானும்
அயர்ந்துவா யுலர்ந்த தானும்
மனமெலா மருள லுக்கம்
மதமதா யுறக்கந் தோன்றல்
௨௨௪. என்னா மிகவே காணுந்
கரங்கள்கால் முடங்கி தூங்கும்
நினைவில்லா பித்த மோக
சன்னியா னிலமை தானே. 6.

சிலேற்றுமச் சன்னியின் குணம்.

நீர்ப்பெருந் தாக மோடு
நினைவழுந் தளரு வீச்சு
வேர்த்திடம் பல்லா தாகும்
விக்கலும் பல்லாப் பித்தம்
காற்றுரு நாவும் பல்லுங்
கட்டியே கண்டந் தன்னில்
ஏற்பன மிகவே தோன்றுந்
சிலேற்றும சன்னி தானே. 7.

வாத மோக சன்னியின் குணம்.

அகலவாய் பிளக்கு மூடும்
அயர்ந்துட னுரைவாய் தள்ளும்
பகலெல்லா மெழுந்து மூச்சு
பாரதென வெழுந்தி ரைக்கும்
புகலில்லா வலிய வாக்கும்
பொன்றிடு மதிக மாக
யகதனம் வாத மோக
சன்னியா னியல்பு தானே. 8.

வாதமாஞ் சன்னியின் குணம்

சிரசுடன் பக்க நெற்றி
நெரித்திடும் மூக்கு நாக்கு
சுரசமாம் கழுத்து மார்பு
சுற்றுமித் தலங்க ளெல்லாம்
பரிசர மேறு தாளும்
பற்றியே யனலுந் தோன்றில்
வரிசைசேர் குழலி னாளே
வாதமாஞ் சன்னி யாமே. 9.

பித்த சன்னியின் குணம்

உள்ளெரிந் தண்ணீர் தாகத்
துடன்பிற லாப மூர்ச்சை
கொள்ளிடும் பிரமை மோகம்
கூறிய அரங்கள் வேர்வை
தள்ளிடுந் திரைதுக் காவிற்
சாற்றுமிக் குணங்கள் கண்டால்
கள்ளமாம் பித்த சன்னி
கன்றியென் றறிந்து கொள்ளே. 10.

சிலேற்பன சன்னியின் குணம்

அ. அஞ்சிடா வாந்தி காந்த
லங்கமும் நடுக்கல் நெஞ்சி
கஞ்சியாய் நொய்தல் அவாசம்
காசமாந் தோஷங் கோழை
மிஞ்சிய பிரமை யீளை
மேவிடும் பிலனு மின்னை
தஞ்சமாஞ் சிலேற்பன சன்னி
தன்குணஞ் சாற்றி னோமே. 11.

மயக்க சன்னியின் குணம்

அம்பு மயக்கு மறிவை யழிப்பக்கு
வம்புந் தவம்போ லவிர்ப்பிக்கும் - செம்மை
மயக்கும் ~~யா~~ சன்னியென வாகடத்தார் பேசு
முறைக்குமோ முன்னோர் மொழி.

பன்னிரண்டு சன்னியின் குணம் முற்றும்

~~நடுக்குந் அழுத்தி செய்யும்~~
நடுக்குந் அழுத்திசெய்யும் நாத்தடக்கிப் பேசும்
நடுக்கு முனையு மிருக்கைகால் - அடித்து
நடுக்குவது வாதசன்னி நான்செலுத்தி மீள
நடுக்கும் வாதியென்றே யறி.

பஞ்சாயமுர்தம்.

உஉரு. அமுர்தபஞ்சா யமுர்தத்தைப்
அறுமுறையோர் சொன்னபடி
பெருமையுடன் கூட்டும்வகை பேசக்கேள் - திருமொழி
தேன்

திப்பமன் சீதமது திரண்கைந்தக னானி
செப்பமுட னொர்நிறையாய்ச் சேர்த்திக்கொள் - துப்புர
வாய்

அதிக்கா யாறுநிறை தான்தூக்கி திப்பிலியும்
ஆதரவா யொண்பதுபலம் காக்கிக்கொள் - வேதமில்லாச்
சேதப் பொடிசெய்து சேர்த்திப் பணவிடைதான்
× காதமுள்ள இத்திச்சார் தின்னிவிட - பாதச்சுரம்
போக்கும் கிராணிக்கு பொருந்திடும் வைத்தியன்
தாக்கும் அவாசகாசம் தணக்குமே - நோக்க
முடன்

அ. திரிவனைக் ~~கிஞ்சாயத்தின்~~ கஷா தீரும் வயத்துவலி
குருதி மிளகு பொடியன் கூட்டலாம் - யுக்தைச்
தரும்

பஞ்சவணம் வறுத்த பற்பம் இன்மத்திக்காகும்
வெந்தியதே சிவொற்றுமலேந் தாக்கிநிக்கு - மிஞ்சி
தோ
வெப்பம்பட்டை சார்தன்னிவிட ஒழிவிடும்
ரத்திரக்கிரிச்சிக்கு

யாதொட்டமுடன் இளசிச்சார் தின்னிவிட - சீப்பு
முடன்

அகமாகை வாந்திக்கு அட்டபுளித் தோன்சாம்பல்
பக்குவணைப் போற்றிப் பறந்தோடும் - அதம்விட

மார்பின்னோ யானைக்கால் வாதத்தியிலி வெடித்து
திருமேனி வெதும்பின் நாக்காள் - தேராத
வெப்புடம் அதீரணைத்துக் கோமமது வொடுக்க
தப்பாம லிம்மருந்தை தாக்குவாய் - அற்பமாய்
226. ஆனைத்து பேன்மது அதுவங் கடுத்தாக்காள்
ஜாசமுறுந் அக்குவொழ வாகாகும் - மீதி....
∴ இய மோர்சேர்ந்த பசுவின் தயிராகும்
மெய்ப்பாகன் கொன்வாய் விரைந்து.

இஞ்சி லேகியம்

சுக்குடன் மிளகு திப்பலி
அத்திமாய்க் கொத்த மல்லி
அக்கமான கடுகு ரோகணி
அதிமதுரங் கோரங் கிழங்கு
பொக்கமான லவங்கப் பட்டை
போனதோர் யேலங் கிராம்பு
தக்கமான ஓமமுடன் அமுக்கிரா
பச்சையுந் தானு மிண்டாம
திக்க மான சீரகமும்
சிறந்த இஞ்சி லேகியமே.

97.

உஷ்ணத்துக்கும் அதிசாரக் கிராணிக்கும் மருந்து.
கேசரிக் குளிகை.

இன்னமொழி மானேகேள் கிராணி கேசரியை
புன்ன ~~~~ படியா வுரைக்கக்கேள் ~~~~ திரு
மிர்தமொடு உயர்சாதி லிங்கம் காரமுடன்
காந்தமோ டோமம் அண்ட கோரோசாணி
அபின் கசகசா நெற்பொரியு ~~மீண்டு~~
மீண்டு அதிவிடையம் யேலமுடன் ஜன்னாடி யின்
